| | |
|---|---|
| மையம் : ______________ | பெயர்: ______________ |
| | பதிவு எண்: ______________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________ | நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – நவம்பர் – டிசம்பர் 2019**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**

Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

I. **பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following text and answer the questions given below in a single line. **(5x1=5)**

இசுமாயில் மலேயாவுக்கு வந்த புதிதில் எல்லாம் சரியாக இருந்தது. எஸ்டேட்டில் கடையும் சுகமான வருமானமும் வந்தது. அபிதாவை 'நிக்காஹ்' செய்த சமயத்தில் பணம் கையிலும் பேங்கிலும் புரண்டது. பிறகு எல்லாம் தலைகீழாக மாறத்தொடங்கியது ஐயாயிரம் வெள்ளி பெறுமதி கொண்ட கடை எரிந்து சாம்பலாயிற்று.

**வினாக்கள் :**

1. யார் மலேயாவிற்கு சென்றார்?

______________________________

2. இசுமாயில் யாரை "நிக்காஹ்" செய்தார்?

______________________________

3. எவ்வளவு வெள்ளி பெறுமதியை கடை கொண்டிருந்தது?

______________________________

4. கடைக்கு என்ன ஆயிற்று?

______________________________

5. கடை இருந்த இடம் எது?

______________________________

II. **பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

மண்ணுக்குள்ளே இருந்து
எண்ணெய் எடுப்போம்! – தினம்
வகைவகைச் சோதனையில்
நெல்லைக் குவிப்போம்
விண்ணைப்பிளந்து சென்று
நோட்டமிடுவோம்! – நாம்
விரைவாக நல்வாழ்வுத்
தோட்ட மிடுவோம்!

ஞானத்தில் முன்னேறுவோம்! – விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!
வானத்தில் பறந்து வையத்தையே அளந்து
ஞானத்தில் முன்னேறுவோம்! – விஞ்
ஞானத்தில் முன்னேறுவோம்!

**வினாக்கள்**

1. மண்ணுக்குள் இருந்து என்ன எடுப்போம்?

______________________________

2. வகைவகையாய் எதைக் குவிக்க சோதனை செய்வோம்?

______________________________

3. எதைப் பிளந்து நோட்டமிடுவோம்?

______________________________

4. எதில் நாம் முன்னேறுவோம் என்கிறார் கவிஞர்.

______________________________

5. எதில் பறந்து எதை அளப்போம் என்கிறார் கவிஞர்?

______________________________

III. **பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**
Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. விடா முயற்சி.

2. ஜூலை மாதம்.

3. இடி

4. விளையாடி

5. பகுதி

IV. **பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**
Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. தாயுமானவர் உலகத்திலுள்ள எல்லாவுயிர்களையும் எவ்வாறு எண்ண வேண்டும் என விரும்புகிறார்?
2. "பொன்னியின் செல்வன் காட்டும் கடலின் வருணனையை விவரி?
3. பெயர்ச்சொல் வகைகள் எத்தனை வகைப்படும் அவை யாவை?
4. மும்பை பெரு மழையால் ஏற்பட்ட பாதிப்புகள் இரண்டினை விளக்கு.
5. விஜயலட்சமியின் விளையாட்டு பாணி எத்தகையது?
6. மெய் பொருள் காண்பது குறித்த வள்ளுவரின் ஒரு குறளை எழுதி விளக்குக.
7. கணிப்பொறியின் நான்கு அடிப்படை பகுதிகளை எழுதுக.
8. வாழ்வில் மறைந்து போனவையாகப் பாரதிதாசன் கூறுவன யாவை?

9. "நல்லது செய்யாதே" "ஒழுங்காய் நடக்காதே" – இந்த இரு எதிர்மறை வாக்கியங்களை ஏவல் வாக்கியங்களாக மாற்றி எழுதுக.
10. ஔவைக்கு நெல்லிக்கனி ஈந்த மன்னன் யார்? அவன் ஆண்ட நாடு எது?

V பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.

Write a letter on any one of the given subjects. (1x10=10)

1. ஆத்திச் சூடியின் அறக்கருத்துக்கள் குறித்து நண்பனுக்கு கடிதம் வரைக.
2. விஜயலட்சமியின் வெற்றிப்பயணம் குறித்து சகோதரருக்கு கடிதம் வரைக.
3. தந்தை தாயோடு இருந்த விடுமுறை நாட்கள் குறித்து நண்பனுக்கு கடிதம் வரைக.

*****